www.usefuldesk.com 

No. of Printed Pages : 7

பதிவு எண் | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்குப் பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அடிபிறழாமல் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I
**(மதிப்பெண்கள் : 20)**
**பகுதி - 1**

**I.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **6x1=6**

**1.** சேக்கிழாரின் காலம் __________.

(அ) கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

(ஆ) கி.பி. எட்டாம் நூற்றாண்டு

(இ) கி.பி. ஏழாம் நூற்றாண்டு

**2.** உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் __________.

(அ) சடையப்ப வள்ளல்

(ஆ) வள்ளல் சீதக்காதி

(இ) வள்ளல் பாண்டித்துரை தேவர்

[ திருப்புக

www.usefuldesk.com www.sarkarinaukridb.com www.usefuldesk.com

www.usefuldesk.com 



3. புறாவின் துன்பத்தைப் போக்கிய மன்னன் ________.
   (அ) மனுநீதிச் சோழன் (ஆ) குலோத்துங்கன் (இ) சிபி.

4. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ________.
   (அ) பத்மஶ்ரீ (ஆ) பாரத ரத்னா (இ) பத்மவிபூஷன்

5. திரைப்படத்தில் ஒளிப்பதிவு செய்ய ________ கருவி இன்றியமையாதது.
   (அ) ஒலிப்பதிவுக் கருவி
   (ஆ) படப்பிடிப்புக் கருவி
   (இ) திரைப்படச் சுருள்

6. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ________.
   (அ) பத்தாம் வகுப்பு
   (ஆ) பன்னிரண்டாம் வகுப்பு
   (இ) எட்டாம் வகுப்பு

## பகுதி - 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 6x1=6

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ________ அமைந்துள்ளன.

8. 'அரி' என்னும் சொல்லின் பொருள் ________.

9. கலம்பகம் ________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

10. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி ________.

11. குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன ________.

12. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்பது ________.

www.usefuldesk.com
www.sarkarinaukridb.com

www.usefuldesk.com 3



## பகுதி - 3

4x1=4

III. பொருத்துக.

13. இராமாயணம் - சாலை இளந்திரையன்

14. திருக்குறள் - திருநாவுக்கரசர்

15. தேவாரம் - திருவள்ளுவர்

16. பூத்தது மானுடம் - கம்பர்

## பகுதி - 4

4x1=4

IV. விடைக்கேற்ற வினா அமைக்க.

17. மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர் நாடி போன்றவை.

18. உலகம் என்னும் தமிழ்ச் சொல் உலவு என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.

19. போராட்ட முறைகள் இரு வகைப்படும்.

20. இராமலிங்கர் வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலைப் பாடினார்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x2=10

21. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?

22. ஏலாதி – நூற்குறிப்பு எழுதுக.

23. கம்பரின் பெருமையைக் குறிக்கும் தொடர்கள் ஏதேனும் இரண்டனை எழுதுக.

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com

www.sarkarinaukridb.com

www.usefuldesk.com 4



24. "இப்போது இங்கு அவன் உதவான்"
– யார் யாரிடம் கூறியது ?

25. நாற்பொருள்கள் யாவை ?

26. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?

27. பண்பு எனப்படுவது யாது ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x2=10

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை ?

29. விளக்கப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?

30. தொன்மைத் தமிழகம் குறிக்கும் இசைக்கருவிகளின் வகைகளை எழுதுக.

31. உடலை ஓம்ப வேண்டியதன் இன்றியமையாமையைத் திருமூலர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

32. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?

33. சத்திய தருமச் சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

www.usefuldesk.com
www.usefuldesk.com
www.sarkarinaukridb.com

www.usefuldesk.com 



## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x4=12**

35. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?

36. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ? அவன் விடுத்த வேண்டுகோள் யாது ?

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

38. சீறாப்புராணம் – குறிப்பு எழுது.

39. 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

### பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x4=12**

40. பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?

41. அண்ணல் அம்பேத்கரின் இலட்சிய சமூகம் எத்தகையது ?

42. மேடைப்பேச்சில் கருத்துக்களை உணர்த்தும் திறத்தை விளக்குக.

43. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

44. காந்தியடிகள் தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதிகொள்ள காரணமாக அமைந்த நிகழ்ச்சியை எழுதுக.

[ திருப்புக

www.usefuldesk.com
www.sarkarinaukridb.com

www.usefuldesk.com 



## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x1=5

45. தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

**வினாக்கள்.**

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ii) முத்தமிழ் – தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

(iii) உன்னோடு வந்துரைக்கும் – பிரித்தெழுதுக.

(iv) விளம்பக்கேள் – பொருள் தருக.

(v) இப்பாடலில் இடம் பெறுள்ள அடியெதுகைகளை எழுதுக.

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x1=5

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேனிலைக் கல்வியில் உயர்மதிப்பெண் பெற்றோர், அந்தந்த பாடப்பிரிவின் தகுதிக்கேற்ப விண்ணப்பிக்கலாம். இவர்கள் கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்பட்டுக் கல்லூரிகளில் சேர்ந்து உரிய காலத்தில் படித்து முடிப்பர். படித்து முடித்தவர்கள் அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

தற்போது உயிரி-தொழில்நுட்பத்துறை நுண்ணியல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழிற்படிப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வேதியியல், விலங்கியல் துறைகளில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்களுக்கும், சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் சிறந்த வேலை வாய்ப்புத் துறையாக தற்போது இது விளங்கி வருகிறது.

**வினாக்கள் :**

(i) தொழிற்கல்வித் துறைகள் யாவை ?

(ii) தொழிற்கல்வித் துறையில் நுழைவதற்கான கல்வித் தகுதி யாது ?

(iii) தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் எம்முறை மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.

(iv) உயிரி – தொழில் நுட்பத் துறையின் சிறப்பம்சம் யாது ?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

www.usefuldesk.com www.sarkarinaukridb.com

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும். **2x8=16**

**47.** (அ) காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**அல்லது**

(ஆ) புலியின் கொடுஞ்செயல்களையும், நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையையும் விளக்குக.

**48.** (அ) பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவன-வற்றை எழுதுக.

**அல்லது**

(ஆ) வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப்பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக.

### பகுதி - 2

**49.** செய்யுள் வடிவில் விடை தருக. **2+2+3+3=10**

(அ) ஒழுக்கம் – எனத் தொடங்கும் குறள்

(ஆ) பொருள் – எனத் தொடங்கும் குறள்

(இ) ‘விடுநனி’ – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

(ஈ) ‘இன்று தொட்டிவண்’ – எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

- o O o -

www.usefuldesk.com

www.usefuldesk.com www.sarkarinaukridb.com